**தலைப்பு 161 – வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று மற்றும் திறைசேரியின் புத்தகங்களுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 715,538,612 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரி புத்தகங் களுடன் இணக்கஞ் செய்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | அனைத்து சொத்துக் களும் CIGAS கனிணி மென்பொருள் மூலம் நாளது வரை ஆக்கு வதற்கு முடியாதிருந்தது. அமைச்சின் கீழ் காணப்படும் திணைக் களத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

| **விபரம்** | **நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா.** | **திறைசேரி ஏடுகளின் பிரகாரம் பெறுமதி. ரூபா.** | **வித்தியாசம் ரூபா.** |
|---|---|---|---|
| நிதி அல்லாத சொத்துக்கள் (ஆரம்ப மீதி) | 319,866,075 | 225,026,425 | 94,839,650 |
| வாகனக் கொள்வனவு | 262,929,556 | -- | 262,929,556 |
| நிதி அல்லாத சொத்துக்கள் (இறுதி மீதி) | 231,662,632 | 225,026,425 | 6,636,270 |
| அப்புறப்படுத்தியவை | 351,133,199 | -- | 351,133,199 |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தம் | **715,538,612** | |
| (ஆ) | 2018 ஜனவரி முதல் 4 வாகனங்கள் செயற்படாமல் காணப்பட்டது. | அகற்றுவதற்கு அல்லது பயன்படுத்தக் கூடிய நிலைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டுக் குழுவுக்காக ஆட்களின் பெயர்களை குறிப்பிட்டு அனுப்புமாறு மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. |
| (இ) | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் அமைப்பில் இருந்து விவசாய அமைச்சுக்கு வழங்கியிருந்த வாகனம் 2017 மார்ச் 30 திகதி அமைச்சுக்கு கிடைத்திருந்த போதிலும் அதனை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த வாகனம் 2018 ஜூலை 06 திகதி அளவில் காணாமல் போயிருந்தது. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோத் தர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட் டிருந்தது. |
| (ஈ) | அமைச்சுக்கு உரித்தில்லாத கூட்டுப் பெறுமதி ரூபா 22,600,000 தொகைக்கான 06 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்ட போதிலும் அந்த வாகனங்களை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொம்ட்ரோலர் ஜனரலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (உ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது 54,647 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்த வாகனம் ஒன்றின் கிளச் முறைமை நான்கு தடவைகள் புதிதாக பொருத்தியிருந்ததுடன் திருத்த வேலைக்காக ரூபா 392,709 தொகை செலவிடப்பட்டிருந்தது. | முறைசாரா பயன்படுத்தல் களை தவிர்ப் பதற்காக உரிய நடவடிக்கை எடுப்பதற்காக செயற்பட வேண்டும். | விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கும் படி இயந்திரப் பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i. பிணைப் பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர் களின் தகவல்கள் அடங்கிய பிணை பதிவேடு ஒன்று தயாரித்திருக்க வில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தி யோகத்தர்கள் தொடர்பாக பிணை பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். | நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| ii. சேதங்கள் பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பாக பதிவேடு நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. | சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். | நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| iii. விலைகூறல் அழைப்புப் பதிவேடு | | |
| அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.2.1 இன் பிரகாரம் விலைகூறல் அழைப்புப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | விலைகூறல் அழைப்பு பேரேடு ஒன்று பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்துதல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுபடுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன் படி முறைமை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தேவையான வித்தியாசங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விகு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடு களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தேவையான வலுப்படுத்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்பு | | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | -- | 9 வாகன விபத்துக் கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தாமதமின்றி விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நிதிப் பிரமாணம் 1645(ஆ) | -- | நிதிப் பிரமாணம் 1645 (ஆ) இன் பிரகாரம் நாளாந்த ஓட்டக் குறிப்பு அனைத்து மாதங்களிலும் 15 ஆம் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டு மெனினும், 14 வாகனங்களின் 8 மாதங்களுக்கான ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கின்றேன். |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | | |
| (i) 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய இலக்கம் 25/99 | - | அமைச்சுக்கு சொந்த மான 16 குழாம் வாகனங்களில் அரச இலட்சினை பதித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒரு மாதத்திற்குள் பதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 | - | வாகனங்களின் பராமரிப்பு எரிபொருள் நுகர்வு, சம்பவக் குறிப்பேடு மற்றும் ஓட்ட அட்டவணைகள் பேணப்படல் மற்றும் எரிபொருள் செயற் திறன் அளவை செய்யப் படாமல் வாகனங்கள் பயன் படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளித்திருக்க வில்லை. |
| (இ) 2017 திசெம்பர் 21 திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | வன சீவராசிகள் நம்பிக்கை பொறுப்பு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும் அமைச்சி னால் அவ்வாறு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுற்றறிக்கை | - | ஓட்ட முடியா நிலை யில் காணப்படும் மோட்டார் வாகனங் களை 2016 ஜூன் 30 இற்கு முன்னர் அப்புறப்படுத்தப்பட வேண்டு மெனினும் 03 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டி ருக்கவில்லை. | அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குழு ஒன்று நியமனம் செய்து பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 செலவு விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவு விடயங்களுக்கு ஏற்பாடுகள் மாற்றப்பட்ட பின்னரும் ரூபா 1,542,848 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | சிறந்த ஆய்வு ஒன்றின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | அமைச்சுகள் ஒன்றிணைந்த காரணத்தினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. |
| (ஆ) | 2018 ஆண்டிற்காக தயாரிக்க ப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள 21 செலவு விடயங்களில் 17 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப் பட்டதுடன் ஒரு செலவு விடயத்தில் நூற்றிற்கு நூறும் சேமிக்கப்பட்டிருந்தது. | சிறந்த ஆய்வு ஒன்றின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | அமைச்சுகள் ஒன்றிணைந்த காரணத்தினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் ஏதேனும் ஒரு திணைக்களம் ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்பு க்களுக்கு கடப்படக் கூடாது எனினும் அமைச்சினால் 02 செலவு விடயங்களில் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 2,447,357 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | கொள்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஒன்றும் மற்றும் CITES கருத்தரங்கிற்காக மேற்கொள்ள ப்பட்ட செலவுகளுக்காக ஏற்பட்டிருந்த கடப்பாடு ஒன்றாகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த வட மாகாண அபிவிருத்தி திட்டம் மற்றும் புத்தள மாவட்ட அபிவிருத்தி திட்டத்திற்காக முறையே ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 11.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், செலவிடப் பட்டிருந்த ரூபா 0.67 மில்லியன் தொகை மற்றும் ரூபா 5.2 மில்லியனிற்கு உரிய கருமங்களின் பௌதீக முன்னேற்றம் சுமார் 25 சதவீதத்திற்காக மற்றும் 40 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | திட்டமிடப்பட்ட இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டின் போது செயற்திட்டத்தை செயற்படுத்து வதற்கு வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் வடமாகாணத்தில் அமைந்துள்ள வன சீவராசிகள் சுற்றாடல் சார் சுற்றுலா உள்ளார்ந்த ஆற்றல் உடனான காப்பு பகுதியை ஆய்வு செய்வதற்காக கூறுவிலை அழைக்கப்பட்டு இருந்ததுடன் ஒருவரும் முன்வந்திருக்க வில்லை. திட்டமிட்டிருந்த செயற்திட்டங்களின் ஏற்பாடுகள் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப் பட்டது. |

### 3.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 பெப்ரவரி 01 ஆம் திகதிய அமப/16/26/98/708/039 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் புதிய சரணாலயங்கள் பகிரங்கப்படுத்தல், தேசிய சரணாலயங்களின் தரத்திற்கு உயர்த்துதல், இயற்கை காப்பு ஒன்றாக ஆக்குதல் மற்றும் சரணாலயங்களின் எல்லைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் கலாவெவ தேசிய பூந்தோட்டம், காயன்கரனிய கடல்சார் புதிய இயற்கை காப்பு, சிறிய ராவணா பெரிய ராவணா மற்றும் கடல்சார் சரணால யங்களை பகிரங்கப்படுத்தல், மாதுகங்கை சரணாலயத்தின் எல்லைகளை திருத்தும் அலுவல்கள் 2018 இறுதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேவையான அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப் பட வேண்டும். | தேவையான சட்ட நடவடிக்கை கள் எடுப்பதற்காக சட்டவாக்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் நெருங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி 17 நோக்கங்கள் மற்றும் அவற்றோடு இணைந்த 169 தேசிய இலக்கு களை உள்ளடங்கிய இந்த தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டம் 2030 அளவில் பூர்த்தி செய்ய வேண்டி இருந்த போதிலும் இந்த காலப் பகுதியை உள்ளடக்கி உரிய நோக்கங்களை நெருங்கிக் கொள்வதற்கு இயலுமான விதத்தில் கூட்டிணைந்த திட்டமொன்று அமைச்சினால் தயாரித்திருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து அதன் படி நோக்கங்களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டிற்கான நிலைபேறான அபிவிருத்தி பிரிவில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ளது. |
| (ஆ) | நோக்கங்களை நெருங்குவதற்காக அரச நிறுவனங்களைக் கூட்டிணைக்கும் பொறுப்பு இந்த அமைச்சுக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட நிறுவனங்களின் நிலைபேறான அபிவிருத்திகளின் குறிக்கோள் களை நெருங்கிக் கொள்வதற்காக செயற்பாடுகள் 2019 ஏப்ரல் 30 திகதி வரை எடுத்திருக்கவில்லை. | அரச நிறுவனங்களை கூட்டிணைத்தல் மேற்கொள்ளப் பட வேண்டும். | தற்போது இந்த அலுவல்கள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் காணப்படும் நிலைபேறான அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மட்டத்தில் 05 பதவிகள் மற்றும் இரண்டாம் தர மட்டத்தில் 09 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமையால் அமைச்சின் செயற்பாட்டு வினைத்திறன் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்து அனுப்பும் படி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளேன். |
| (ஆ) | ஒட்டு மொத்தமாக அமைச்சில் பதவி வெற்றிடங்கள் 27 காணப்பட்டதுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகாரத்திற்காக விண்ணப் பித்துள்ள வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்வதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. |